**(2025-26-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE** **25 UTM 2A1**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2026

பி. ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

இரண்டாம் பருவம் நேரம் : 3 மணி

**பகுதி** – 3

***தமிழ் இலக்கிய வரலாறு***

**பகுதி – அ** **(10x1=10** மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)

1. *இந்திய நாட்டினை 'நாவலந் தண்பொழில்' என்று அழைப்பது…………*

   *அ) திருமுருகாற்றுப்படை ஆ) பொருநராற்றுப்படை*

   *இ) சிறுபாணாற்றுப்படை ஈ) பெரும்பாணாற்றுப்படை*

2. *சிலப்பதிகாரக் கடலாடுகாதை சுட்டும் ஆடல் வகைகள் எத்தனை?*

   *அ)* 8 *ஆ)* 9 *இ)* 11 *ஈ)* 18

3. *தஞ்சைவாணன் கோவையை இயற்றியவர் யார்?*

   *அ) கணிமேதாவியார் ஆ) பரஞ்சோதி முனிவர் இ) பொய்யாமொழிப் புலவர் ஈ) அம்பிகாபதி*

4. *திருவாய்மொழிக்கு ஒன்பதாயிரப் படியை எழுதியவர் யார்?*

   *அ) நஞ்சீயர் ஆ) திருக்குருகைப் பிரான்பிள்ளை இ) அழகிய மாணவாளர் ஈ) பெரியவாச்சான் பிள்ளை*

5. *'தமிழிசை இலக்கணநூல்' என்று போற்றப்படுவது எது?*

   *அ) தொல்காப்பியம் ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) பெருநாரை*

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. (K2)

6. *'திணையிலக்கியம்' - குறிப்புரைக்க.*

7. *ஏதேனும் இரண்டு புராணங்களை எழுதுக?*

8. *'சதகம்' – குறிப்பு* வரைக.

9. *'மணிப்பிரவாளம்' என்பதன் சொல்* ஆக்கத்தைக் கூறுக.

10. *சங்கரதாசு சுவாமிகள் இயற்றிய ஏதேனும் இரண்டு நாடகங்களை எழுதுக.*

பகுதி - ஆ

கீழ்க்காணும் வினாக்களுக்கு இரு பக்க அளவில் விடை தருக. **( 5 X 5 = 25** மதிப்பெண்கள் **)**

11. அ) *திருக்குறள் - நாலடியார் நூல்களின் பொதுக்கூறுகளை* எழுதுக.

    (அல்லது)

    ஆ) *சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகளைப் பட்டியலிடுக.*

12. அ) *ஐம்பெரும் காப்பியங்களில் பௌத்த சமயம் சார்ந்த காப்பியங்கள் குறித்து எழுதுக.*

    (அல்லது)

    ஆ) *காரைக்கால் அம்மையார் - ஆண்டாள் ஆகியோரைப் பக்தி இலக்கிய நோக்கில்* எடுத்தியம்புக. .

(த.பி.பா.)

13. அ) ஆண்பாற் பிள்ளைத்தமிழ் - பெண்பாற் பிள்ளைத்தமிழ் வேறுபடுத்துக.

(அல்லது)

ஆ) சிற்றிலக்கியங்களின் சிறப்பியல்புகளை விளக்குக.

14. அ) பதினெண் சித்தர்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

ஆ) நிகண்டுகளின் படிமலர்ச்சியை எழுதுக.

15. அ) ஆறுமுக நாவலரின் தமிழ்த்தொண்டை உரைக்கவும்.

(அல்லது)

ஆ) பள்ளு, குறவஞ்சி நாடகங்களின் கட்டமைப்பினை எழுதுக.

## பகுதி – இ ( **5 X 8 = 40** மதிப்பெண்கள் )

அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடையளிக்கவும். **(K4 (Or) K5)**

16. அ) சங்கம் இருந்ததற்கான ஏற்பு மற்றும் மறுப்புக் குறித்த செய்திகளை ஆய்க.

(அல்லது)

ஆ) 'திருக்குறள் சிந்தனைகள் சமகாலத்திற்குப் பொருந்துமா?' ஆராய்க.

17. அ) 'சிலப்பதிகாரம் - மணிமேகலை இரண்டும் இரட்டைக் காப்பியங்களா என்பதனைச் சான்றுகளுடன் நிறுவுக.

(அல்லது)

ஆ) பக்தி இலக்கியத்தின் சிறப்பியல்புகளைக் கட்டுரைக்க.

18. அ) சிற்றிலக்கியங்களின் வகைதொகை குறித்து விரிவாக ஆய்க.

(அல்லது)

ஆ) சிற்றிலக்கியங்களின் பாடுபொருள் குறித்துக் கருத்துரைக்கவும்.

19 அ) பொருளிலக்கண நூல்களை விவரி.

(அல்லது)

ஆ) "சைவ சித்தாந்த சாத்திரங்கள் தமிழர்களுக்கே உரிய தொன்மையான தத்துவம்" எனும் கூற்றினை நிறுவுக.

20. அ) இசை, நாடக இலக்கியம் குறித்த இலக்கியக் குறிப்புகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) தமிழ் வளர்ச்சியில் சமயங்களின் பங்களிப்புக் குறித்து விரிவாக ஆராய்க.

*ETHICAL PAPER*

**********************